2020 மார்ச் 20] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

இருக்கின்ற பிரச்சினைகளை எதிர்க்கட்சிகள் மூலமாக அரசின் கவனத்திற்குக் கொண்டுவருவதன் வாயிலாக, அதற்கு உரிய நடவடிக்கைகளை அரசு எடுப்பதற்கு ஏதுவாக இருக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–55

3. விதி 110–ன்கீழ் அறிக்கைகள்

(அ) அம்மா நகரும் நியாய விலைக் கடைகள் தொடங்குதல், கூட்டுறவு நிறுவனங்களை நவீனமயமாக்குதல், சேலம், செம்மடுவு, கூட்டுறவு பயிற்சி நிலையம் அமைத்தல், காஞ்சிபுரம், மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைக்கு இரண்டு திருமண மண்டபங்கள் கட்டுதல், புதிதாக அம்மா சிறு கூட்டுறவு சிறப்பங்காடிகள் தொடங்குதல் உள்ளிட்ட கூட்டுறவுத் துறை குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி 110–ன்கீழ் அறிக்கைகள் அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையினுடைய சில அறிவிப்புகளை வெளியிடுகின்றேன்:

1. பல்வேறு தரப்பிலிருந்து வரும் கோரிக்கைகளைக் கருத்திற்கொண்டு, மக்களின் குடியிருப்புகளுக்கு அருகிலேயே அத்தியாவசியப் பொருட்களை விநியோகிக்கும் பொருட்டு, 3,501 அம்மா நகரும் நியாய விலைக் கடைகள் 9.66 கோடி ரூபாய் மதிப்பீட்டில் துவங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

2. கூட்டுறவு நிறுவனங்களின் உட்கட்டமைப்பு வசதியினை மேம்படுத்தி வாடிக்கையாளர்களுக்கு நவீன வங்கிச் சேவையினை

அளிக்கும் பொருட்டு, 95 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள், 6 மத்தியக் கூட்டுறவு வங்கிக் கிளைகள், ஒரு நகரக் கூட்டுறவு வங்கி, ஒரு நகரக் கூட்டுறவுக் கடன் சங்கம், ஒரு தொடக்கக் கூட்டுறவு பண்டகசாலை மற்றும் ஒரு பணியாளர் கூட்டுறவுக் கடன் மற்றும் சிக்கன நாணயச் சங்கம் என மொத்தம் 105 கூட்டுறவுக் கடன் நிறுவனங்களுக்கு 27.74 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சொந்த அலுவலகக் கட்டடம் கட்டித் தரப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

3. வணிக வங்கிகளுக்கு இணையாக புதிய வசதிகளுடன்கூடிய நவீன வங்கிச் சேவையை வாடிக்கையாளர்களுக்கு வழங்கிட ஏதுவாக, 74 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள், 10 மத்தியக் கூட்டுறவு வங்கிகள், 3 நகரக் கூட்டுறவு வங்கிகள், 7 நகரக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் மற்றும் ஒரு தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி என மொத்தம் 95 கூட்டுறவு நிறுவனங்கள் 14.75 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நவீனமயமாக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

4. புதுக்கோட்டை மற்றும் சிவகங்கை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளுக்கு புதிய தலைமை அலுவலகக் கட்டடங்களும், மதுரை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைமை அலுவலகத்தில் நவீன வசதிகளுடன்கூடிய கூடுதல் கட்டடமும் 17.87 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

5. சேலம் மாவட்டம், ஏற்காடு வட்டம், மஞ்சக்குட்டை ஊராட்சி, செம்மடுவு கிராமத்தில் 15.85 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மாநில அளவிலான புதிய கூட்டுறவு பயிற்சி நிலையம் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

6. காஞ்சிபுரம் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைக்கு சென்னை, தண்டையார்பேட்டையில் சொந்தமாக உள்ள இடத்தில் 5.65 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும், காஞ்சிபுரம் நகரிலுள்ள மற்றோர் இடத்தில் 4.15 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும் 2 திருமண மண்டபங்கள் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

7. அம்மா சிறு கூட்டுறவு சிறப்பங்காடிகள் மக்களின் வரவேற்பினை பெரிய அளவில் பெற்றுள்ள நிலையில், மாநிலம் முழுவதும் 189 அங்காடிகள் கூடுதலாகத் துவக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் இப்பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(ஆ) நெல் உலர்களம் வசதியுடன் நேரடி கொள்முதல் நிலையங்கள் அமைத்தல், நவீன விஞ்ஞான தொழில்நுட்பத்துடன்கூடிய நெல் சேமிப்பு கொள்கலன்கள் அமைத்தல் உள்ளிட்ட உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உணவுத் துறை சார்பில் கீழ்க்கண்ட அறிவிப்புகளை வெளியிடுகின்றேன்:

1. நெல் உலர்களம் வசதியுடன் நவீன நெல் சேமிப்பு கொள்கலனுடனும்கூடிய நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் தமிழ்நாடு முழுவதும் 50 இடங்களில் 70 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

2. 30 வருடங்களுக்கு மேலான, எதிர்காலத்தில் பயன்படுத்த இயலாத அளவிற்கு சேதமடைந்த கிடங்குகளை முற்றிலும் அகற்றி, சென்னை IIT–யின் ஆலோசனை மற்றும் தொழில்நுட்பத்துடன், ஒரு இலட்சம் மெட்ரிக் டன் கொள்ளளவுக் கொண்ட புதிய நவீன சேமிப்புக் கிடங்குகள் 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

3. வேளாண் மண்டலமாக அறிவிக்கப்பட்ட தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், புதுக்கோட்டை மற்றும் கடலூர் மாவட்டங்களில் வேளாண் பெருமக்களிடமிருந்து கொள்முதல் செய்யப்படும் நெல்லினைப் பதப்படுத்தி சேமித்து வைத்திடும் வகையில், 75 ஆயிரம் மெட்ரிக் டன் கொள்ளளவுக் கொண்ட நவீன விஞ்ஞான தொழில்நுட்பத்துடன்கூடிய நெல் சேமிப்பு கொள்கலன்கள் 225 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

4. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகக் கிடங்கு வளாகங்களில் அமைந்துள்ள சேதமடைந்த சாலைகள் மற்றும் இணைப்புச் சாலைகள், 120 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய சிமென்ட் கான்கிரீட் சாலைகளாக அமைக்கப்படும். இதன்மூலம் இவ்வளாகத்திற்கு வந்து செல்லும் கனரக வாகனங்களினால் பழுது ஏற்படாமல், கான்கிரீட் சாலைகள் நீண்ட காலத்திற்குப்

பயன்படும் வகையில் மேம்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் இப்பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(இ) கன்னியாகுமரி மாவட்டம், ஹெலன் நகர், ராஜாக்கமங்கலம், கொட்டில்பாடு, இராமநாதபுரம் மாவட்டம், மண்டபம்–வடக்கு, மண்டபம்–தெற்கு, காஞ்சிபுரம் மாவட்டம், புது குப்பம், உய்யாலி குப்பம் ஆகிய கிராமங்களில் மீன் இறங்குதளங்கள் அமைத்தல் உள்ளிட்ட மீன் வளத் துறை குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீன் வளத் துறை சார்பில் பின்வரும் அறிவிப்புகளை வெளியிடுகின்றேன்:

1. கன்னியாகுமரி மாவட்டம், தேங்காப்பட்டணம் மீன்பிடித் துறைமுகத்தில் முதல் கட்டமாக கூடுதல் கட்டமைப்பு வசதிகள் 60 கோடி ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

2. கன்னியாகுமரி மாவட்டம், ஹெலன் நகர், ராஜாக்கமங்கலம் மற்றும் கொட்டில்பாடு ஆகிய கிராமங்களில் 39.90 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மீன் இறங்குதளங்கள் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

3. திருவள்ளூர் மாவட்டம், பழவேற்காடு ஏரியின் முகத்துவாரம் இயற்கை காரணங்களினால் மூடாதவாறு இருக்க, 27 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

4. தூத்துக்குடி மாவட்ட மீன்பிடித் துறைமுகத்தின் படகு அணையும் தளத்தினை 25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நீட்டித்து, கூடுதல் படகுகள் நிறுத்துவதற்கு வசதிகள் ஏற்படுத்தப்படும்.

நண்பகல் 12–00

5. இராமநாதபுரம் மாவட்டம், மண்டபம்–வடக்கு மற்றும் மண்டபம்–தெற்கு கிராமங்களில் 20 கோடி ரூபாய் செலவில் மீன் இறங்குதளங்கள் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

6. கடலூர் மாவட்டம், அன்னன்கோயில் மற்றும் புதுக்குப்பம் கிராமங்களில் உள்ள மீன் இறங்குதளங்கள் 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய வசதிகள் ஏற்படுத்தி புனரமைக்கப்படும். மேலும், முடசலோடை கிராமத்தில் உள்ள மீன் இறங்குதளம் கூடுதல் படகுகள் நிறுத்துவதற்கு ஏதுவாக 9 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் நீட்டிக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

7. காஞ்சிபுரம் மாவட்டம், புது குப்பம் மற்றும் உய்யாலி குப்பம் கிராமங்களில், 17 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மீன் இறங்குதளம் அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(ஈ) புதிய கால்நடைக் கிளை நிலையங்கள் தோற்றுவித்தல், கிளை நிலையங்கள், மருந்தகங்கள் தரம் உயர்த்துதல், நாகர்கோவில் கால்நடை மருத்துவமனையை பன்முக மருத்துவமனையாகத் தரம் உயர்த்துதல், தேனி மாவட்டத்தில் புதிய கால்நடை மருத்துவக் கல்லூரி அமைத்தல் உள்ளிட்ட கால்நடை பராமரிப்புத் துறை குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடை பராமரிப்புத் துறையின்கீழ் பின்வரும் அறிவிப்புகளை வெளியிடுகின்றேன்:

1. 1.60 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 40 புதிய கால்நடைக் கிளை நிலையங்கள் தோற்றுவிக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், 3.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 25 கிளை நிலையங்கள், கால்நடை மருந்தகங்களாகவும்; 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 5 கால்நடை மருந்தகங்கள், கால்நடை மருத்துவமனைகளாகவும்; 1.20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நாகர்கோவில் கால்நடை மருத்துவமனையை 24 மணி நேரமும் செயல்படும் முதல்தர சேவைகள் வழங்கும் கால்நடை பன்முக மருத்துவமனையாகவும் தரம் உயர்த்தப்படும்.

2. கிராமப்புறங்களில் நாட்டுக்கோழி வளர்ப்பை வணிகரீதியில் மேற்கொள்ளும் 1,925 பயனாளிகளுக்கு 50 சதவிகித மானியத்தில் தலா 1,000 கோழிக் குஞ்சுகள், ஒரு மாதத்திற்கான கோழித் தீவனம் மற்றும் குஞ்சு பொரிப்பகம் அமைத்துக் கொடுக்க 14.73 கோடி ரூபாய் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] [2020 மார்ச் 20

3. விவசாயிகளின் பொருளாதார இழப்பினைத் தவிர்க்கும் வகையில் 90.35 இலட்சம் கால்நடைகளுக்கு 22.03 கோடி ரூபாய் செலவில் கோமாரி நோய் தடுப்பூசி போடப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

4. ராணிப்பேட்டை கால்நடை நோய்த் தடுப்பு மருந்து நிலையத்தில் உள்ள ஆட்டம்மை தடுப்பூசி மருந்து உற்பத்திப் பிரிவு, 18.03 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நல் உற்பத்தி நடைமுறைகள் (GMP) தரத்திற்கு தரம் உயர்த்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

5. தேனி மாவட்டத்தில் ஒரு புதிய கால்நடை மருத்துவக் கல்லூரி அமைக்கப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(உ) ஏழு புதிய கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் தோற்றுவித்தல் பற்றிய உயர் கல்வித் துறை குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர் கல்வியில் மாணவர் சேர்க்கை விகிதத்தை மேலும் உயர்த்தவும், கிராமப்புற மாணவர்கள் பயன் பெறவும், உயர் கல்வித் துறைமூலம் ஏழு புதிய கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) வரும் கல்வி ஆண்டு முதல் இக்கல்லூரிகள் செயல்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(ஊ) 13–3–2020 அன்று பள்ளிக் கல்வித் துறை தொடர்பான அறிக்கையின் தொடர்ச்சியாக 50 அரசு நடுநிலை மற்றும் உயர்நிலைப் பள்ளிகள் தரம் உயர்த்துதல் பற்றிய பள்ளிக் கல்வித் துறை குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான், 13–3–2020 அன்று பேரவையில், பேரவை விதி 110–ன்கீழ், பள்ளிக் கல்வித் துறை சார்பாக வெளியிட்ட அறிவிப்புகளில், வரும் கல்வியாண்டில் 15 அரசு நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும்; 30 அரசு உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்தப்படும் என்று அறிவித்திருந்தேன்.

தற்போது, பல்வேறு தரப்பினரிடமிருந்தும், பெற்றோர்களிடமிருந்தும் பெறப்பட்ட கோரிக்கைகளின் அடிப்படையில், ஏற்கெனவே அறிவித்த 15 அரசு நடுநிலைப் பள்ளிகளுக்குப் பதிலாக, 50 அரசு நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், (மேசையைத் தட்டும் ஒலி) மேலும் 30 அரசு உயர்நிலைப் பள்ளிகளுக்குப் பதிலாக 50 அரசு உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் வரும் கல்வியாண்டில் தரம் உயர்த்தப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொண்டு அமைகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

4. கூட்டுறவு உணவு, மீன் வளம், கால்நடை பராமரிப்பு, உயர் கல்வி, பள்ளிக்கல்வி ஆகிய துறைகள் தொடர்பான முதலமைச்சரின் அறிவிப்புகளுக்கு நன்றி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்திலிருந்து இன்றுவரை தொடக்கப் பள்ளிகளை ஆரம்பித்து அவற்றைத் தரம் உயர்த்தப்படுகின்ற வரலாறு தமிழகத்திலே நடைபெறுகிறது. கல்வியாளர்களே வியக்கத்தக்க அளவிற்கு, இமயத்தை எட்டுகின்ற அளவிற்கு வளர்ச்சியை உருவாக்கியிருக்கின்ற ஆற்றல்மிக்க முதலமைச்சர் தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்கள். அனைத்துத் துறைகளிலும் வரலாறு படைத்துக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்குப் பள்ளிக் கல்வித் துறையின் சார்பாக என்னுடைய நெஞ்சார்ந்த வாழ்த்துகளையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 12–05

***மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில், கூட்டுறவுத் துறை பல்வேறு நிலைகளில் வளர்ச்சி பெற்று சிறப்பாகச் செயல்பட்டுவரும் நிலையில், கூட்டுறவுத் துறையின் வரலாற்றில்